புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM
• திருவள்ளுவர் ஆண்டு 2057 • செப்டம்பர் (SEPTEMBER) 10, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 37 • விலை(PRICE) ரூ.6.00

# பெரியார் பிறந்தநாள் விழா; தயாராகிறது சேலம்
## நாள் முழுவதும் தொடர் நிகழ்ச்சிகள்

**பெரியார் பிறந்தநாள் விழாவுக்கு சேலம் கிழக்கு, மேற்கு, மாநகரத் தோழர்கள் தயாராகி வருகின்றனர்.**

**சேலம் மேற்கு:** மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 31.08.2026 மாலை 6.00 மணியளவில் மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார்.

**தீர்மானங்கள்:** 01.08.2026-ல் மறைந்த கழக மூத்த தோழர் இலக்கம்பட்டி குமார் அவர்களுக்கு சேலம் மாவட்டக் கழகம் சார்பாக புகழ் வணக்கத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

2).எதிர்வரும் செப்டம்பர்-17 பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவையொட்டி கோனூர் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலைக்கு 17.09.2026 காலை 9.00 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வது எனவும், சேலம் மேற்கு மாவட்டம் முழுவதும் பெரியார் பிறந்த நாள் விழா பதாகைகள் வைத்து மாலை அணிவித்து இனிப்புகள் வழங்குவது எனவும், இருசக்கர வாகனப் பேரணி மூலமாக கிளைக் கழக வாரியாக கோனூர் சமத்துவபுரத்தில் தொடங்கி மேச்சேரி, நங்கவள்ளி, வனவாசி, பனங்காடு,மேட்டூர் ஆர்.எஸ், மேட்டூர், காவலாண்டியூர், கண்ணாமூச்சி,கொளத்தூர், தார்காடு என 25 க்கும் மேற்பட்ட பகுதிகளுக்கு சென்று பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்கி, பிரச்சார வாகனத்தில் பறை முழக்கத்துடன் பெரியாரின் கொள்கைகளை மக்களுக்கு பரப்புவது எனவும் முடிவு செய்யப்பட்டது. நிறைவாக சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூறினார்.

**(குறிப்பு)** செப்டம்பர்-17 தந்தை பெரியார் பிறந்தநாள் அன்று காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் உணவு ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், மாவட்டப் பொருளாளர் சம்பத், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மேற்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு, நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன், கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் விஜயகுமார், இளைஞரணி செயலாளர் பிரபாகரன், கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவு, நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரச் செயலாளர் உமா சங்கர், இளைஞரணி அமைப்பாளர் சிவ சண்முகம், மேட்டூர் ஆர்.எஸ் பகுதிச் செயலாளர் விவேக், மேட்டூர் பகுதி தோழர்கள் சீனிவாசன், முத்துராஜ், தேவன், வேணுகோபால், ரவி, காளியப்பன், கொளத்தூர் பகுதி தோழர்கள் கணேசன், செந்தமிழ் கலைஅமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம் கிழக்கு:** மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 03.09.2026 வியாழன் மாலை 5.00 மணிக்கு கருப்பூரில், சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் இல்லத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலை வகித்தார்.

கலந்துரையாடல் கூட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்று, பல்வேறு முக்கியமான கருத்துகளைப் பதிவு செய்தனர். கழகத்தின் செயல்பாடுகள், எதிர்காலப் பணிகள், சமூகப் பிரச்சினைகள், மக்கள் மத்தியில் மேற்கொள்ள வேண்டிய பரப்புரைகள் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள் குறித்து தோழர்கள் தங்களது கருத்துகளையும், அனுபவங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல், வழக்கமான கூட்டமாக இல்லாமல், ஒரு வகுப்பு போலவும், கருத்துப் பரிமாற்றக் களமாகவும் அமைந்தது. ஒவ்வொரு கருத்தும் கவனமாகக் கேட்கப்பட்டு, அதன்மீது தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. தோழர்களின் கேள்விகள், கருத்துகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டதோடு, ஒரு கருத்தை மட்டும் முன்வைத்து முடிப்பதற்குப் பதிலாக, பல்வேறு கோணங்களில் சிந்தித்து விவாதிக்கும் வகையில் கலந்துரையாடல் அமைந்தது.

கழகத்தின் கொள்கைகளையும், பெரியாரிய சிந்தனைகளையும் மக்கள் மத்தியில் மேலும் வலுவாகக் கொண்டு செல்வதற்கான பணிகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பது குறித்தும் தோழர்கள் தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.



**தீர்மானங்கள்:** எதிர்வரும் செப்டம்பர்-17 பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இருசக்கர வாகனப் பேரணி நடத்துவது, தந்தை பெரியார் பிறந்த நாள் பதாகைகள் சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் வைத்து மாலை அணிவித்து, அந்தந்த பகுதிகளில் பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

2. சேலம் மாநகராட்சியில் குடிநீர் தனியார் மயமாக்கப்பட்டதை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. நிறைவாக சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி நன்றி கூறனார்.

சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன், சேலம் மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர்க் கழக மாவட்ட பொறுப்பாளர் கவியரசு, இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், சிந்தாமணியூர் நகரத் தலைவர் ஜெயபிரகாஷ், ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, இளம்பிள்ளை நகரச் செயலாளர் மோகன்ராஜ், இளங்கோவன், இளம்பிள்ளை சௌந்தர், இளம்பிள்ளை குப்புசாமி, சுதர்சன், கோகுல், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், இளம்பிள்ளை குட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம் மாநகரம்:** 06-09-2026 ஞாயிறு காலை 10.00 மணிக்கு பாலமுருகன் அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு சேலம் மாநகரத் தலைவர் பாலு தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலை வகித்தார். கலந்துரையாடல் கூட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்று, பெரியார் பிறந்த நாள் விழாவினை சிறப்பாக நடத்திட தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர்.

காலை உணவு, படத்திறப்பு, வாகனப் பேரணி, தேநீர் விருந்து என பெரியார் பிறந்த நாள் விழா ஆரம்பம் முதல் இறுதி வரை எந்த ஒரு தடையும் இன்றி நடத்துவது குறித்து தோழர்கள் தங்களது கருத்துகளையும், அனுபவங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

பெரியார் பிறந்த நாளன்று துண்டறிக்கைகள் வழங்கும் பணியை முன்மொழிந்த சேலம் மாநகரத் தலைவர் பாலு துண்டறிக்கைகளுக்காண முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டார். பிறந்தநாள் விழாவிற்கான செலவினங்களை தோழர்களின் பங்களிப்பைக் கொண்டு நடத்த அனைவராலும் முடிவு எடுக்கப்பட்டது.

**தீர்மானம்:** எதிர்வரும் செப்டம்பர்-17-2026 தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இருசக்கர வாகனப் பேரணி நடத்துவது, தந்தை பெரியார் பிறந்த நாள் பதாகைகள் சேலம் மாநகரம் முழுவதும் படம் வைத்து மாலை அணிவித்து, அந்தந்த பகுதிகளில் பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

நிறைவாக சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி நன்றி கூறனார். சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், சேலம் மாநகரப் பொருளாளர் பிரபு, மாநகரத் தோழர்கள்: செந்தில், அம்பிகாபதி, பாலாஜி, பாலமுருகன், சுதர்சன் வெற்றிமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தரிசனத்தில் பார்ப்பனருக்கு முன்னுரிமை;
# உயர்நீதிமன்றம் கண்டனம்

இறைவன் முன்பாக அனைத்து உயிர்களும் சமமானதே என தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், வழிபாட்டுத் தலங்களில் யாருக்கும் எந்தப் பாகுபாடும் காட்ட இடமில்லை என திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் தேவராஜ சுவாமிகள் தேவஸ்தானம், வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள மணவாள மாமுனிகள் சன்னதியில் பிராமணர் அல்லாத தென்கலை வைணவ பக்தர்களிடம் சுவாமி தரிசனம் மற்றும் தீர்த்தம், பிரசாதம் வழங்குவதில் சாதிய ரீதியில் பாகுபாடு மற்றும் பாரபட்சம் பார்க்கப்படுவதாகக்கூறி காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருக்கச்சி நம்பி திருமாலடியார் சேவா சங்கத்தின் செயலாளரான மாதவன் ராமானுஜ தாசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில், ‘பிராமணர்கள் மட்டும் வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள மணவாள மாமுனிகள் சன்னதியில் சுவாமி தரிசனம் மேற்கொள்ள பிரதான வாயில் வழியாக அனுமதிக்கப்படும் நிலையில், பிராமணர் அல்லாதோர் பக்கவாட்டு வாயில் வழியாகவே அனுமதிக்கப்படுகின்றனர். இதுதொடர்பாக கோயில் நிர்வாகத்திடம் பலமுறை சுட்டிக்காட்டியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை’ எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன், இ.மனோகரன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எஸ். சண்முகசுந்தரமும், கோயில் நிர்வாகம் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆர். பரணிதரனும், பிற எதிர்மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஹேமா சம்பத்தும் ஆஜராகி வாதிட்டனர்.

அப்போது கோயில் நிர்வாகம் தரப்பில், ‘வரதராஜப்பெருமாள் கோயிலில் ஆழ்வார்கள் மற்றும் ஆச்சாரியார்கள் சன்னதிகள் உள்ள இடம் மிகக்குறுகலானது. சேவா கால நேரங்களில் பணியில் இருக்கும் முறைதாரர்கள் கூட சன்னதிக்குள் முழுமையாக நிற்க முடியாத

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

### தலையங்கம்

## ஜாதிவாரிக் கணக்கெடுப்பில் குளறுபடி

ஜாதிவாரிக் கணக்கெடுப்பின் முதன்மையான நோக்கம் சமூகநீதிக் கொள்கைகளை வளர்த்தெடுப்பதுதான். உண்மையான பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்து அதற்கு ஏற்ப இடஒதுக்கீட்டு எண்ணிக்கையை உயர்த்த முடியும்; நலத்திட்டங்களை உருவாக்க முடியும்; இதன் வழியாக சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை அகற்ற முடியும். இந்த நோக்கம் இப்போது திசை மாற்றப்படுகிறது.

பாஜக ஆட்சி நீண்ட காலமாக ஜாதிவாரிக் கணக்கெடுப்பை எதிர்த்து வந்தது. இந்துக்களை மத அடிப்படையில் அணிதிரட்டும் தனது ’இந்துத்துவ’ அரசியலுக்கு உட்ஜாதிப் பிளவுகள் தடையாக வந்து நிற்கும் என்ற அச்சமே அதற்குக் காரணம். அதே நோக்கத்தில் ‘இந்துத்துவ’ அரசியலில் ஜாதிகளுக்கு இடமில்லை; அது ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலையை எடுக்க அவர்கள் தயாராக இல்லை. ஜாதிப் பிரிவுகளும் வேண்டும்; அதே நேரத்தில் இந்து ஒற்றுமையும் வேண்டும் என்பதே பாஜகவின் இரட்டை நிலைப்பாடாக இருந்தது. இந்துத்துவ அரசியலை வடிவமைத்தவர்களின் நோக்கம் பார்ப்பன மேலாண்மைக்கு அடங்கிய பார்ப்பனரல்லாத இந்துக்கள் அடங்கி வாழும் வேதகால ஆட்சியைத் தொடரச் செய்வதுதான்.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் தனது நிலையை திடீரென்று மாற்றிக்கொண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதியையும் சேர்த்துக் கொள்வதாக அறிவித்தது. ஜாதிவாரிக் கணக்கெடுப்பு வேண்டும் என்று போராடியவர்கள் தங்கள் கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியாகவே இதை வரவேற்றனர். ஆனால் ஆட்சியாளர்களின் நோக்கம் வேறு.

இப்போது ஜாதிவாரிக் கணக்கெடுப்புப் படிவங்களில் ’பிற்படுத்தப்பட்டோர்’ என்ற சொற்றொடர் நீக்கப்பட்டுவிட்டது. விருப்பமுள்ளவர்கள் தாங்களாக முன்வந்து தங்கள் ஜாதிப் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களா? என்பதைக் கண்டறிய முடியாது. அது மட்டுமல்லாது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் ‘வகுப்பினர்’ (Class) தான். ஜாதியினர் (Caste) அல்ல என்று ஒன்றிய ஆட்சி கூறிவிட்டது. அதாவது ஜாதி அடிப்படையிலான மதிப்பீடு பொருளாதார அடிப்படைக்கு மாற்றப்பட்டுவிட்டது. (ஒரு காலத்தில் பொதுவுடைமைக் கட்சியினர் முன்வைத்த இந்தக் கோரிக்கையை இப்போது பாஜக தனது கருத்தாக ஏற்றுக் கொண்டு விட்டது. மண்டல் கமிஷன் அமலாக்கத்திற்குப் பிறகு பொதுவுடமைக் கட்சிகளின் பார்வையில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது). ஜாதி என்பதும் குடிமக்களின் ஒரு வகுப்பே ஆகும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஒரு வகுப்பு ஒட்டுமொத்தமாகச் சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய நிலையில் இருந்தால், அரசியலமைப்பின் 15(4)-ஆவது பிரிவின் பொருளில் அது சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய குடிமக்கள் வகுப்பாகக் கருதப்பட்டு, அந்த ஜாதிக்கு இடஒதுக்கீடு வழங்கப்படலாம்"(ராஜேந்திரன் எதிர் இந்திய ஒன்றியம் (1968) வழக்கில் உச்சநீதிமன்றம் தெளிவாக விளக்கியுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான ஜாதிப் பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலைக் கேட்டுப் பெற்று மாநில அரசுடன் கலந்து ஆலோசித்து ஜாதிவாரியான கணக்கெடுப்பை நடத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்கும். ஆனால் ஒன்றிய பாஜக ஆட்சி அதற்குத் தயராக இல்லை.

மண்டல் குழு பரிந்துரையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை சமூக நீதிக்குப் பயன்படுத்தியது. பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 52 விழுக்காடாக இருந்தாலும், அதே அளவு இடஒதுக்கீடு வழங்க மண்டல் ஆணையம் முன்வரவில்லை. காரணம் தாழ்த்தப்பட்டோர் இடஒதுக்கீடு எண்ணிக்கையோடு இணைத்தால் மொத்த ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் அதிகரிக்கும். அது உச்ச நீதிமன்றம் வகுத்த வரம்பின் எல்லையைத் தாண்டி இடஒதுக்கீடு முடக்கப்படலாம் என்ற கவலையால் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கையை 27 விழுக்காடாக வரையறுத்தது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரசு; இப்போது தரவுகளின் அரசாக (Data State) உருமாற்றம் பெற்றுள்ளது. ஆதார், டிஜிட்டல் சேவை தேர்வுத் தளங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவுகள், இப்போது வந்துவிட்டன. இந்த நிலை வரும் என்று அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் கற்பனையில் கூட நினைத்திருக்க மாட்டார்கள்.

இந்தப் பின்னணியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சமூகத்தை மட்டும் படம் பிடிப்பதில்லை. பல்வேறு தரவுகளுடன் இந்தத் தகவல்களை இணைத்து மக்களைத் துல்லியமாக வகைப்படுத்தி தங்களுக்கான தனித்தனி வாக்குத் தொகுதிகளாக மாற்றி அமைப்பதற்கு இந்தத் தரவுகள் ஆளுங்கட்சிக்குத் தேவைப்படுகின்றன. உ.பி மாநிலத்தில் ஒன்றுபட்ட பிற்படுத்தப்பட்டோரின் அரசியல் எழுச்சி தங்களுக்குத் தந்த தோல்வியை உணர்ந்து பிற்படுத்தப்பட்ட சமூகத்தைக் கூறுபோடத் திட்டமிடுகிறார்கள்.

பெரும்பாலான எண்ணிக்கையில் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களை அடிமைப்படுத்தியிருக்கும் ஜாதி அமைப்பு அடையாளத்திலிருந்து விலக்கி வைத்து தரவுகளின் அடிப்படையில் புதிய கூறுகளாக பிளவுப்படுத்துவதே இதன் நோக்கம் என்று சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஜாதி அடையாளத்தையும் காப்பாற்றிக் கொண்டு அதே நேரத்தில் சமூகநீதிக்கான தளத்தில் ஒன்று சேர விடாமல் பிரித்தாளும் சூழ்ச்சி இதில் அடங்கியிருக்கிறது.

ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்ற இயக்கத்தை பாஜக ஆதரவு மாணவர்கள் இப்போதே தொடங்கி விட்டார்கள். அதே நேரத்தில் மனுசாஸ்திர பெருமைகளையும், உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் உட்பட பல பாஜக தலைவர்களும் பேசுகிறார்கள். சமூகநீதிக்கு போராபத்து சூழ்ந்து நிற்கிறது. இந்த நிலையில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பை முறையாக நடத்து என்ற குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்திருக்கிறது.

# ஓ.பி.எஸ்-சின் நாகதோஷ நம்பிக்கை

"நாக தோஷம்" தனது தொகுதியில் பாம்புகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதால் அதைத்தடுப்பதற்கு நாக தோஷம் என்ற சடங்கை நடத்த வேண்டும்" என்று முன்னாள் முதலமைச்சரும் இப்போது திமுக சட்டமன்ற உறுப்பினருமான ஓ.பன்னீர்செல்வம் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். இது நகைச்சுவைக்கான பேச்சு என்று திசை திருப்பி விட முடியாது.இது போன்ற பேச்சுகள் பெரும்பாலும் வட மாநில சட்டமன்றங்களில் தான் பேசப்படும். இப்போது தமிழ்நாடு சட்டமன்றத்திற்கே வந்துவிட்டது. ஆனால் உடனடியாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பெரியார் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட கட்சி இப்படி பேசலாமா? என்று கேட்க, அமைச்சர் அருண்ராஜ் பில்லி, சூனியத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறியிருப்பது பாராட்டி வரவேற்க வேண்டிய ஒன்று.

முதலமைச்சரை ஆஸ்தான ஜோதிடர்தான் வழி நடத்துகிறார் என்று முதலமைச்சரின் மூடநம்பிக்கையை எதிர்க்கும் போது இப்படி "நாகதோஷ" மூடநம்பிக்கைகளை திமுக உறுப்பினர் வெளிச்சம் போட்டுக் காட்டலாமா?

வைதீக மூடச்சடங்குகளில் ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டவர் ஓ.பி.எஸ். அவர் இப்போது திமுகவின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பாம்புகள் மீதான பல மூடநம்பிக்கைகளில் பாமர மக்கள் மூழ்கி இருக்கிறார்கள். இந்த மூட நம்பிக்கைகளை மறுக்கும் அறிவியல் விளக்கங்கள் ஏராளமாக வந்து விட்டன. தமிழ்நாட்டில் மந்திரவாதிகளிடம் ஏமாறுவதும் பேய்,பில்லி,சூனிய நம்பிக்கைகளில் வாழ்க்கையை தொலைப்பதும் அதிகரித்து வரும் நிலையில் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டம் ஒன்றை ஏற்கனவே கர்நாடகா மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருப்பது போல் தமிழ்நாடு அரசும் கொண்டு வர வேண்டும் திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த ஆகஸ்ட் 12 அன்று காரைக்குடியில் நடந்த மாநாட்டில் இந்தக் கோரிக்கையை தீர்மானமாக நிறைவேற்றியதை சுட்டிக் காட்டுகிறோம்.

# ‘மீனாட்சி’குடமுழுக்கில் பார்ப்பனியம்!

திமுக ஆட்சியைத் தொடர்ந்து மீண்டும் சட்ட சபையில் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று த.வெ.க தனித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறது. இதில் தமிழ் முதன்மை மொழியாக நீதிமன்றத்தில் இருக்க வேண்டும் என்று நாங்கள் தான் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று கல்வி அமைச்சர் சட்டமன்றத்தில் பெருமையுடன் குறிப்பிட்டார்.அனைத்துக் கட்சியினரும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உணர்வு இது என்பதில் இரண்டு வித கருத்துக்கு இடமில்லை. அதே நாளில் மற்றொரு செய்தியும் வந்திருக்கிறது; மதுரையில் செப்டம்பர் 17-ல் நிகழ இருக்கும் மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கில் குறைந்தது 50 சதவீதம் நிகழ்வுகள் தமிழ் வழியில் நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தமிழ் உணர்வாளர் கரூர் ராஜேந்திரன் தொடர்ந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

இதுகுறித்து ஆராய ஐந்து ஆண்டுகளுக்கு முன் நியமிக்கப்பட்ட குழு இன்னும் தனது பரிந்துரையை வழங்காத காரணத்தினால் இப்போது இதற்கு உத்தரவிட முடியாது என்று உயர்நீதிமன்றம் கண்டிப்பாக கூறிவிட்டது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஒரு காலத்தில் தமிழ் சைவ மரபு வழியில் நிறுவப்பட்ட கோயில் என்றும் நாயனார், நாச்சியார், அங்கையற்கண்ணி என்று இங்குள்ள தெய்வங்கள் அழைக்கப்பட்டதற்கு கல்வெட்டு சான்றுகள் இருக்கின்றன என்ற வரலாற்று தகவல்களும் வழக்கு மனுவில் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழுக்கும் இடம் உண்டு என்பதற்கு அடையாளமாக கடந்த காலங்களில் குடமுழுக்கு நிகழ்வுகளில் சில தமிழ்ப் பதிகங்கள் பாடப்பட்டன; அவ்வளவுதான்; தமிழ்நாடு அரசு உயர் நீதிமன்றத்தில் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட இதே முறை பின்பற்றப்படும் என்று நீதிமன்றத்தில் கூறியிருக்கிறது. தமிழ் ஒரு மொழி மட்டுமல்ல; அது உடலும் உயிரும் என்று சட்டமன்ற தீர்மானத்தில் கூறிய தமிழ்நாடு அரசு; கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சிகளை எப்படி வடிவமைத்து இருக்கிறது?

தமிழையும் தமிழர்களையும் அவமதித்து இருக்கிறது. கோயில் அறங்காவலர்கள் பெயரை முழுமையாக புறக்கணித்துவிட்டு அழைப்பிதழ்களை தயாரித்திருக்கிறார்கள். இதற்கு உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்து குடமுழுக்கு நிகழ்ச்சியை அரசியல் ஆக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறது. இது செயல் தலைவர் செய்த தவறு; அறநிலையத்துறை பொறுப்பு அல்ல என்று சமாதானம் கூறுகிறார்கள்.

அறங்காவலர் குழுத் தலைவராக திமுக ஆட்சி காலத்தில் நியமிக்கப்பட்டவர். ருக்மணி பழனிவேல் ராஜன் என்ற பெண்; முன்னாள் அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் தாயார். வேத தர்மத்திற்கு எதிராக ஒரு பெண்ணை அதுவும் கணவரை இழந்த ஒரு பெண்ணை அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்து புரட்சி செய்தது கடந்த கால திமுக ஆட்சி. வழக்கு தொடுத்த மற்றொரு அறங்காவலர் ஒரு பெண்; அறங்காவலர் குழுவில் மூன்று பெண்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பெயரை ஏன் கல்வெட்டில் அழைப்பிதழில் இருட்டடிக்க வேண்டும்? பெண்களின் நியமனம் பார்ப்பனிய வேத மரபுக்கு எதிரானது என்பதாலா? அது மட்டுமல்ல; தமிழ் சைவ மரபு வழி வந்த இந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருப்பவர் காஞ்சிபுரம் பார்ப்பன சங்கராச்சாரி விஜயேந்திரன். மதுரை சைவ மடாதிபதி புறக்கணிக்கப்பட்டுள்ளார். பார்ப்பன சங்கராச்சாரி ஏற்கமாட்டார் என்பதால் இந்த மூன்று பெண்களின் பெயர்களும் இருட்டடிக்கப்பட்டதா?

இந்த விஜயேந்திரன் யார்? தமிழ்த்தாய் வாழ்த்து பாடும் போது எழுந்து நிற்க மறுத்தவர்; சங்கர் ராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்; "பிராமணர்கள்" தனியாக குடியிருப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்; பிறரோடு கலந்து வாழக்கூடாது என்று பெங்களூரில் பிராமண மகாசபையில் பகிரங்கமாக பேசியவர் (2025 ஜன.19); பிராமணர் அல்லாதவருடன் சேர்ந்து உணவு அருந்தக்கூடாது என்றும் அதில் அவர் நஞ்சு கக்கினார். இதை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகம் நாடு முழுதும் பரப்புரை இயக்கங்களையே நடத்தியது.அறநிலையத்துறை அமைச்சராக இருக்கும் பார்ப்பனர் ஏன் சங்கராச்சாரியிடம் ஓடுகிறார்? சைவ மத ஆதீனங்கள் இவர் கண்களில் படவில்லையா? சட்டமன்றத்தில் தமிழ்பெருமைக்கு புகழ்பாடும் அமைச்சர்கள் இதை கண்டு கொள்ள மாட்டார்களா?

அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியின் உரிமைக்குக் குரல் கொடுக்கிறோம். ஆனால் வழிபாடு என்று வந்துவிட்டால் சமஸ்கிருதத்துக்கு பார்ப்பனியத்துக்கு தலை வணங்குகிறோம். இந்து மதம் தமிழர் மதமா? பார்ப்பன மதமா?

**- விடுதலை இராசேந்திரன்**

### முதல் பக்க தொடர்ச்சி..

சூழலில், பொதுபக்தர்கள் சன்னதிக்கு வெளியே நிறுத்தி வைக்கப்படுகின்றனர். இதில் வேறு எவ்வித ஜாதியப் பாகுபாடும் பார்க்கப்படுவதில்லை. மேலும் குறிப்பிட்ட காலங்களைத் தவிர மற்ற நேரங்களில் பொது பக்தர்கள் சன்னதியில் திவ்ய பிரபந்தம் பாடி இறைவனை வழிபட எந்தத் தடையும் இல்லை . கோயில் தீர்த்தம் மற்றும் பிரசாதம் வழங்குவதிலும் அனைத்து பக்தர்களும் சமமாகவே பாவிக்கப்படுகின்றனர். இனிவரும் நாட்களிலும் யாருக்கும் எவ்விதப் பாகுபாடும் காட்டப்படாது’ என உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், “இறைவன் முன்பாக அனைத்து உயிர்களும் சமமானதே. இறைவன் யாரிடமும் எந்தப் பாகுபாடும் காட்டுவதில்லை. ‘கடவுளின் பார்வையில் அனைவரும் சமம்’ என்ற பகவத் கீதையின் வாசகத்தை சுட்டிக்காட்டுகிறோம். வழிபாட்டு தலங்களில் இறைவன் முன்பாக யாருக்கும் எந்தப் பாகுபாடும் காட்ட இடமில்லை.

எனவே, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் சுவாமி தரிசனம், தீர்த்தம், சடாரி, பிரசாதம் வழங்குவதிலும், திவ்ய பிரபந்தங்களைப் பாடுவதிலும் சாதிய அடிப்படையில் பக்தர்களிடம் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது. இதுதொடர்பாக கோயில் நிர்வாகம் அளித்துள்ள உத்தரவாதத்தை உறுதியாக பின்பற்ற வேண்டும்” என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

# ‘விநாயகன்’ அரசியலுக்கு வந்த வரலாறு

நாடு முழுக்க இந்துத்துவா அரசியலை இந்துக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன்பேரில் அவர்களை ஒன்று திரட்டவும் அறிவிக்கப்படாத ரத யாத்திரையாக விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் நடந்து வருகின்றன. உண்மையில் இதன் வரலாறு பால கங்காதர திலகருடனும், கடைசி இந்து அரசன் சிவாஜியுடனும் தொடங்குகிறது. ஒருமுறை சிவன் வெளியே சென்றிருந்த நேரம் பார்வதி நீராடச் சென்றார். அப்போது தனக்குக் காவல் காக்க ஒருவரும் இல்லை என்பதால் தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஒரு உருவம் உருவாக்கி அனுக்கிரகத்தால் அதற்கு உயிர் ஊட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளையாகிவிட்டது. எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது எனப் பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி நீராடச் சென்றுவிட்டார். அச்சமயம் அங்கு வந்த சிவனை உள்ளே செல்ல பிள்ளையார் அனுமதிக்கவில்லை. இதனால் கோபம்கொண்ட சிவன் பிள்ளையாரின் தலையை வெட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

நீராடி முடிந்ததும் பார்வதி வெளியே வந்து பிள்ளையார் தலை இல்லாமல் கிடந்த கோலத்தைக் கண்டு ஆவேசமும், கோபமும் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரைச் சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் காளியாக உருமாறி தன் கண்ணில்பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினார். காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். காளியைச் சாந்தப்படுத்துவதற்கு முடிவு செய்த சிவன் தனது கணங்களை (ஏவலாளிகளை) அழைத்து, வட திசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையை வெட்டி வருமாறு பணித்தார். கணங்கள் வட திசையை நோக்கிச் சென்ற போது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது. அவர்கள் அதன் தலையை வெட்டி எடுத்துச்சென்று சிவனிடம் கொடுத்தனர். சிவன் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பிள்ளையாரின் உடலில் பொருத்தி உயிரூட்டிவிட்டார். இதைக் கண்டு சாந்தமடைந்த பார்வதி அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டியணைத்துக் கொண்டார். சிவன் அந்தப் பிள்ளையாருக்கு கணேசன் என்று பெயர் சூட்டி, தனது கணங்களுக்குத் தலைவராக நியமித்தார் என நாரத புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி நடந்தது சுக்கிலபட்ச சதுர்த்தி அன்றாம். அன்றிலிருந்து இத்தினம் விநாயகர் சதுர்த்தி என்றாகிவிட்டது. இதுமட்டுமல்ல, விநாயகரின் தோற்றத்துக்கு இதுபோல பல கதைகள் இருக்கின்றன.

### கலவர அரசியலில் விநாயகன்

அதேபோல விநாயகர் சதுர்த்தி அன்று நடத்தப்படும் ஊர்வலங்களுக்கும் சில தோற்றக் கதைகள் உள்ளன. 16ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர் சிவாஜி, விநாயகர் சதுர்த்தியைப் பிரபலமாக்கினார். தங்களுடைய குலதெய்வமான கணபதிக்கு மக்கள் விழா எடுப்பதை மராட்டிய ஆட்சி அதிகாரத்திலிருந்த பேசுவாக்கள் (பார்ப்பனர்கள்) ஊக்கம் கொடுத்தனர். மராட்டிய ஆட்சி வீழ்ச்சியைச் சந்திக்கும்வரை விநாயகர் சதுர்த்தி விழாக்கள் அங்கு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இந்த நிலையில் பிரிட்டிசு ஆட்சிக்கு எதிராக பம்பாய் மாநகரில் விநாயகர் சதுர்த்தியை மீண்டும் பிரபலப்படுத்தத் தொடங்கினார் பால கங்காதர திலகர். இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்து தேசியவாதத்தை முன்னிறுத்தி அன்னி பெசண்டுடன் ஹோம்ரூல் இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவரான பலகங்காதர திலகர் 1893ஆம் ஆண்டு முதல் பேசுவாக்களின் (பார்ப்பனர்) குடும்ப விழாவாக இருந்த விநாயகர் சதுர்த்தி விழாவை இந்துக்களின் விழாவாக்கினார்.



கி.பி.7ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசனான நரசிம்ம வர்மன் இன்றைய மகாராஷ்டிராவில் உள்ள வாதாபி என்ற ஊரை வீழ்த்தியிருக்கிறார். நரசிம்ம வர்மனின் படைத்தளபதியாக இருந்தவரே சிறுதொண்டர். இவர்தான் வாதாபி வெற்றியின் நினைவாக அங்கிருந்து கணபதியைக் கொண்டுவந்து கணபதிச்சுரம் என்ற கோயில் எழுப்பினார்.

பிளேக் நோயைக் கட்டுப்படுத்த ஆங்கிலேயர்கள் நடவடிக்கை எடுத்தபோது பாலங்காதர திலகர் சொன்னது மிக முக்கியமானது. பிளேக் நோய்க்குக் காரணமான எலிகளைக் கொல்பவர்களுக்கு சன்மானம் அறிவித்தது ஆங்கிலேய அரசு. ஆனால் பால கங்காதர திலகரோ எலிகள் விநாயகனின் வாகனம். அவற்றை அழிக்க ஆங்கிலேய அரசு முயற்சிப்பதாகக் கூறி இந்துக்களைத் திரட்டினார். இந்துக்களும் திரண்டனர். ஆங்கிலேயரால் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. விநாயகனைப் பயன்படுத்திய முதல் அரசியலும், அதற்குக் கிடைத்த முதல் வெற்றியும் அது. அதன்பிறகு விநாயகர் சதுர்த்தி விழாக்கள் மீண்டும் மும்பை முழுக்க நடைபெறத் தொடங்கியது. இந்து மதத்தின் அடிப்படையில் சிவாஜியும், பேசுவாக்களும் கொண்டாடிய சதுர்த்தியை இந்துத்துவத்தின் கூறுகளோடு திலகர் மறு அறிமுகம் செய்து வைத்தார்.

### பால் தாக்கரேவின் பங்கு

இந்த விழாவின் அடிப்படையில் ஊர்வலத்தின் மூலம் இந்துக்களை ஒன்றுபடுத்தி, பிரிட்டிசாரை வீழ்த்தி இந்து ராசுட்டிராவைப் படைக்க விரும்பியிருந்தார் திலகர். அப்போதிருந்தே விநாயகர் ஊர்வலம் அரசியலில் வலுவாகக் காலூன்றிவிட்டது. ஆகவே ஒருவகையில் விநாயகருக்கு முன்பே அவரது வாகனமான எலி விநாயகருக்கான அரசியலுக்குள் நுழைந்துவிட்டது. 1947-க்குப் பிறகு மும்பை மாநகரில் இந்து மத உணர்வோடு மராட்டிய இன உணர்வையும் ஊட்டி வளர்க்க விநாயாகர் ஊர்வலங்கள் பயன்படுத்தப்பட்டன. 1960களில் அந்தப் பணியை வேகமாகச் செய்தது பால் தாக்கரே உருவாக்கிய சிவசேனா.

விநாயகர் ஊர்வலங்களின் போதெல்லாம் கொலைகள், கலவரங்கள் அல்லது இறப்புகள் சாதாரணமாகிப் போனது. இசுலாமியர்கள் மற்றும் பட்டியல் இனத்தவர்கள் குறிவைத்து தாக்கப் பட்டனர். தமிழர்கள் வாழும் தாராவியும் தப்பவில்லை. விநாயகர் சதுர்த்தி, சிவாஜி விழா, தசரா போன்ற சிவசேனாவின் முன்னெடுப்புகள் அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தன. 1995ஆம் ஆண்டில் மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று சிவசேனா ஆட்சியமைத்தது. அதே காலகட்டத்தில் விநாயகர் ஊர்வலங்கள் நாடு முழுவதும் கொண்டாட ஆரம்பமாகியிருந்தன. அதற்கு முன்பு அது ஒரு இந்து பண்டிகையாகக் கோவில் சார்ந்து இருந்தாலும், வீதிகள் தோறும் விநாயகன் கொண்டுவரப்பட்டது 1990களில்தான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்து சமயத்தில் ஆரம்பம் முதலே விநாயகர் இருந்திருக்கவில்லை. சங்ககால இலக்கியங்கள் எதிலும் விநாயகர் குறித்த குறிப்புகள் எதுவும் இல்லை. ஆனால் பக்தி இலக்கியங்களில் பல பெயர்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புகள் வருகிறது. ஆனால் சங்க இலக்கியக் காலங்களில் பவுத்த, சமண மதங்களே கோலோச்சியிருந்தது. அவற்றின் அழிவின் மேல்தான் வைதீக மதங்களான சைவ, வைணவ மதங்கள் பக்தி இலக்கிய காலத்தில் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியிருந்ததையும் நாம் கவனிக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் அரச மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரின் நினைவாகப் பவுத்தர்கள் கடைப்பிடித்து வந்த வழிபாட்டைப் பிள்ளையார் ஆக்கிரமித்திருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. பவுத்தமும், தமிழும் என்ற நூலில் மயிலை சீனி வேங்கடசாமி அரச மர வழிபாட்டை வைதீக மதங்கள் சுவீகரித்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அதேபோல் கி.பி.7ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசனான நரசிம்ம வர்மன் இன்றைய மகாராஷ்டிராவில் உள்ள வாதாபி என்ற ஊரை வீழ்த்தியிருக்கிறார். நரசிம்ம வர்மனின் படைத்தளபதியாக இருந்தவரே சிறுத்தொண்டர். இவர்தான் வாதாபி வெற்றியின் நினைவாக அங்கிருந்து கணபதியைக் கொண்டுவந்து கணபதிச்சுரம் என்ற கோயில் எழுப்பியதாகத் திருஞானசம்பந்தர் பாடியிருப்பதாகக் கூறுகிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரம். சோழர் காலத்தில் வந்தது; பல்லவர் காலத்தில் வந்தது; நாயக்கர் காலத்தில் வந்தது என்று பல பண்பாட்டு ஆய்வுகள் விநாயகர் குறித்து முன்வைக்கப்படுகிறது.

### பிள்ளையாரைப் போட்டுடைத்த பெரியார்

பெரியார் முன்னெடுத்த இந்துமத எதிர்ப்பு பிரச்சாரங்களில் மற்ற கடவுள்களைக் காட்டிலும் பிள்ளையாரை அதிகம் தாக்கினார். இராமன் தொடங்கி அனுமன் வரை பலர் குறித்தும் கட்டவிழ்ப்புகள் நிகழ பிள்ளையார் மட்டும்தான் உடைபட்டார். பெரியார் பிள்ளையாரை உடைக்க ஆரம்பித்ததற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பிள்ளையார் குறித்து விமர்சிக்க ஆரம்பித்திருந்தார்.

“கடவுள்களின் சங்கதி தெரியவேண்டு மானால் முதலில் முதற்கடவுளைப் பற்றி தெரிந்து கொள்வதுதான் நன்மையானதாகும். முதற்கடவுளின் சங்கதி இன்னமாதிரி என்று தெரிந்தால், மற்ற கடவுள்களின் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாக இருக்கலாம். ஒரு காரியத்தை ஆரம்பித்தால் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறை என்று சொல்லப்படுவதால், நாமும் கடவுள்களின் கதையைப் பற்றி விளக்கப்போவதில் முதற் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியது முறை யாகுமன்றோ! இல்லாவிட்டால் அக்கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக்காரியத்துக்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படும். அன்றியும், சமீபத்தில் பிள்ளையார் சதுர்த்தி ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் பொருத்தமானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குது” என்றுதான் பிள்ளையாரை அம்பலப்படுத்தினார் பெரியார். மேலும் விநாயகரின் உருவாக்கத்தை, அதுதொடர்பான புராணக்கதைகளைப் பேசி பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்தார் பெரியார். இதுதவிர தனது குடிஅரசு பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் விநாயகர் உருவாக்கம் தொடர்பாக, விநாயகர் செயல்பாடு தொடர்பாக இருக்கும் புராணக் கதைகள் தொடர்பாக சிலவற்றை மேற்கோள்காட்டியிருப்பார். அப்படியான புராணக் கதைகளைப் பேசி, எழுதி பிரச்சாரம் செய்த பெரியார் ஒரு கட்டத்தில் பிள்ளையார் சிலைகளை உடைத்தும் விட்டார்.

இதற்கு இந்துத்துவா இயக்கங்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியது. ஆனால் பெரியார், “பிள்ளையார் உருவத்தை உடைப்பதில் ஒன்றும் அதிசயப்பட வேண்டியதில்லை, தயக்கப்பட வேண்டியதில்லை. பிள்ளையார் சதுர்த்தி பண்டிகையின்போது நாடு முழுவதும் எத்தனை எத்தனை ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மண் பிள்ளையாரை மக்கள் மண்பாண்ட தயாரிப் பாளர்களிடம் வாங்கிப் பிள்ளையார் சதுர்த்தி முடிந்தவுடன் கடலில், ஆற்றில், ஓடையில், ஏரியில், குளத்தில், கிணற்றில், புனலில், வயலில் எறிந்துவிடுகிறார்கள். அதனுடன் கரைந்து பிள்ளையார் நீரோடு நீராக, மண்ணோடு மண்ணாக கரைந்துவிடுவது இல்லையா? இது தெரிந்தே மக்கள் நீரில் போடுவது இல்லையா? அதுபோன்ற செய்கைதான் இதை உடைத்துத் தூளாக்கி மண்ணோடு மண்ணாக்குவதும். நாம் காசு போட்டு வாங்குகிறோமே ஒழிய, வேறு எந்த மனிதனுக்கும் உரிமை இருக்கிற வஸ்துவிடமும் நாம் செல்லவில்லை. தொடவில்லை. நாமாக வாங்கி உடைப்பதும் நமக்கு பிள்ளையார் கடவுள் அல்ல; வேத சாஸ்திர ஆதாரம் என்பதன்படியும் அது கடவுள் அல்ல; கடவுளுக்கு எந்த உருவமும் இல்லை” என்று 1953ஆம் ஆண்டு மே மாத விடுதலை இதழில் எழுதினார் பெரியார்.

### தமிழ்ச் சினிமாவின் பங்கு

இப்படித் தமிழ்நாட்டில் பகுத்தறிவு அரசியலில் இருந்த விநாயகர் மற்ற இந்திய பகுதிகளைப் போலவே ஊர்வல அரசியலுக்கு வந்தது 1980களில்தான். மண்டைக்காடு கலவரம் அதற்கு முக்கியமானது. விநாயகர் சதுர்த்தி சிலையில் இருந்து தொடங்கிய கலவரம் துப்பாக்கிச்சூட்டில் சென்று முடிந்தது. பாட்சா படத்திற்குப் பிறகு ரஜினி ரசிகர்களின் கொண்டாட்ட நிகழ்வாகிப்போனது விநாயகர் சதுர்த்தி. அதன்பிறகு வீரா படத்தில் தொடங்கி, காலா படம் வரை ரஜினியின் படங்களில் விநாயகர் அவ்வப்போது தலை காட்டி வந்தார். இதுதவிர அஜித்தின் படங்களிலும் அதிகம் முக்கியத்துவம் பெறும் பண்டிகையாக விநாயகர் சதுர்த்தி முன்னிறுத்தப்பட்டது. தமிழ்ச் சினிமா எங்கும் பரப்பப்பட்டு விநாயகர் சதுர்த்தி இளைஞர்கள் மனதில் பதிய வைக்கப்பட்டது.

இராமாயணம், மகாபாரதம் எப்படி எழுத, படிக்கத் தெரியாத மக்களிடம் கூட நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டதோ அதேபோல விநாயகரும் நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டார். 1990களுக்குப் பிறகு வெளிவரத் தொடங்கிய விநாயகர் நாடகங்கள் இன்று வரையில் வார இறுதி நாட்களில் முக்கிய நேர நாடகங்களாக இருக்கின்றன. இந்த நாடகங்கள் விநாயகர் மீதான புனித பிம்பத்தைக் கட்டமைத்தது. வட நாட்டில் சித்தி, புத்தி என இரண்டு மனைவிகளுடன் வலம்வந்த விநாயகர் சிலைகள் தமிழ்நாட்டில் மட்டும் பிரம்மச்சாரியாக வலம் வந்தது. தமிழ்நாட்டில் ராமரைக் கொண்டுபோய் சேர்ப்பதே இன்னும் கடினமாக இருக்கும்போது விநாயகர் எளிதாகச் சென்று சேர்ந்ததற்கு மிக முக்கியக் காரணம் விநாயகர் குறும்புக் கடவுளாகவும், குழந்தைக் கடவுளாகவும் முன்வைக்கப்பட்டதே. இன்றைக்கு விநாயகர் ஊர்வலங்கள் மிகப்பெரிய சட்டம் - ஒழுங்கு சிக்கலாக மாறியிருக்கிறது. இசுலாமிய பகுதிகளை விநாயகர் சிலை ஊர்வலங்கள் கடக்கும்போது காவல் துறையின் நிலைமை கவலைக்குரியதாக மாறுகிறது. இவை எல்லாவற்றையும் தாண்டி சுற்றுச் சூழல் பிரச்சினையும் இதில் முக்கியமானதாக எழுந்துள்ளது.

**– விடுதலை இராசேந்திரன்**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

## ஜாதிவெறிப் பேச்சு: தூரி முனுசாமி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கழகம் மனு!




ஆகஸ்ட்-16, 2026 அன்று இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் பசும்பொன்னில் நடந்த DNT மாநாட்டில் ஆணவக்கொலைகளைத் தூண்டும் விதமாகவும் இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராகவும் தூரி. முனியசாமி என்பவர் பேசியது சமூக வலைதளங்களில் ஊடகங்களில் பரவி வந்ததையடுத்து இவர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து கைது செய்யக்கோரி கோவை மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் கழகத்தினர் ஆக-27, 2026 அன்று காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்தனர். மனுவைப் பெற்றுக்கொண்ட கோவை காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

## மாவீரன் ஒண்டிவீரன் நினைவு நாள்!



ஆக-20, வியாழக்கிழமை அன்று காலை 10:30 மணியளவில் தமிழ்ப்புலிகள் கட்சி நடத்திய இந்திய சுதந்திர விடுதலைப் போராட்ட மாவீரர் ஒண்டிவீரன் அவர்களுக்கு 255-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி சேலம் கிச்சிப்பாளையத்தில் நடைபெற்றது. கழகம் சார்பாக சேலம் மாநகரச் செயலாளர் இரா.ஆனந்தி கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினார்.

## கண்ணாமூச்சியில் கண்டன ஆர்பாட்டம்!

கண்ணாமூச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நிர்வாக சீர்கேட்டைக் கண்டித்து 24-08-2026 அன்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வழக்கறிஞர். ஈசன் முருகசாமி, (நிறுவனர், த.வி.பா. சங்கம்) தலைமை வகித்தார். முத்துச்சாமி (மாநில துணைத் தலைவர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்) முன்னிலை வகித்தார்.

என்.ஆர்.பி.நாகராஜன் (தலைவர், மேட்டூர் அணை உபரிநீர் வேண்டுவோர் மற்றும் விவசாயிகள் முன்னேற்ற நலச்சங்கம்), காவை. ஈசுவரன் தலைமைக் குழு உறுப்பினர், திவிக), சுரேசு (மாவட்ட செயலாளர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்), டி.எஸ். பி.இராசேந்திரன் (துணைத் தலைவர், மேட்டூர் அணை உபரிநீர் வேண்டுவோர் மற்றும் விவசாயிகள் முன்னேற்ற நலச்சங்கம்), காவை. இளவரசன் ( கொள்கை பரப்புச் செயலாளர், தமிழக வி.பா. சங்கம்) க. சித்துசாமி (தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், திவிக) ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். நடராஜ் மூலக்கடை நன்றி கூறினார்.



## சுயமரியாதை ஜாதி மறுப்பு திருமணம்!



தர்மபுரி மாவட்டம் காரியமங்கலம் வட்டம் அடிலம் அல்ராஜ் கோட்டை தெய்வானை - பெரியசாமி ஆகியோர் மகன் முகிலரசன் ராமநாதபுரம் மாவட்டம் டி.மாரியூர் மாரியம்மாள் - வீரபாண்டி மகள் பொன்.முனியம்மாள் ஆகியோரின் சுயமரியாதை ஜாதி மறுப்பு திருமணம் காவலாண்டியூர் தந்தை பெரியார் படிப்பகத்தில் ஆக-20 அன்று தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது. கழகத் தோழர்கள் குமரேசன் அவிநாசி கணேஷ் சேட்டு ஆகியோர் இத்திருமணத்தில் கலந்து கொண்டனர்.

## விடுதலைப் போராட்ட வீரர் பொல்லான் நினைவுநாளில் கழகத் தலைவர்!



விடுதலைப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் நினைவு அரங்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மரியாதை செலுத்தினார்!

23.08.2025 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் ஈரோடு மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் கடந்த 2025-ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சார்பாக முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் நினைவு அரங்கிற்கு வந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிலைக்கு புகழ் வணக்கம் செலுத்தி, நினைவு அரங்கத்தைப் பார்வையிட்டார்.

சமூக நீதி மக்கள் கட்சித் தலைவர் வடிவேல் ராமன், அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராஜ், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், ரவிக்குமார், சந்திரன், பொன்னுசாமி, செட்டியூர் மாரி, காவை அவினாசி மற்றும் சமூக நீதி மக்கள் கட்சியினர், தி. மு. க - வினர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

## திலகவதி - ராகுல்கண்ணன் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா!

நாமக்கல் மாவட்டம், குமாராபாளையம் பகுதியைச் சார்ந்த மாதுராஜ்-சரஸ்வதி இணையரின் மகள் திலகவதி அவர்களுக்கும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை பகுதியைச் சார்ந்த தேவேந்திரன்-பேபி இணையரின் மகன் ராகுல்கண்ணன் அவர்களுக்கும் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணியளவில் ஈரோடு அரச்சலூர் புத்தா ஹாலில் நடைபெற்றது. மூடநம்பிக்கைகளுக்கு எதிரான சிற்பி ராசன் அவர்களின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரையும் கவனம் ஈர்க்கச் செய்தது.

மாதுராஜ் வரவேற்புரையாற்றினார். கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி. வேலுசாமி, நாமக்கல் மாவட்டச் செயலாளர் சாமிநாதன், சமூக நீதி மக்கள் கட்சித் தலைவர் வடிவேல் ராமன், தி. மு. க பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியச் செயலாளர் நாச்சிமுத்து, ஓய்வுபெற்ற ஆசிரியர் நடராஜன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.



நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணமக்களுக்கு வாழ்த்துரையாற்றி, வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் செய்து வைத்தார். சுவேதா நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி ஒருங்கிணைத்தார்.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன், ஈரோடு, சேலம், திருப்பூர், நாமக்கல் ஆகிய மாவட்டக் கழக மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள், தோழமை அமைப்பைச் சார்ந்தவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மேட்டூர் குமரப்பா தாயார் முடிவெய்தினார்!

கழக மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா அவர்களின் தாயார் சுசீலா அவர்கள் 28.08.2026 வெள்ளி அதிகாலை 4.00 மணியளவில் முடிவெய்தினார். அவர்களின் இறுதி நிகழ்வு மாலை 4.00 மணியளவில் மேட்டூர் ஆஸ்பத்திரிகாலனி பகுதியில் உள்ள அவர்களது இல்லத்தில் நடைபெற்றது.

இறுதி நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இறுதி மரியாதை செலுத்தினார். கழகப் பொருளாளர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட, ஒன்றிய, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

- **கழகத் தோழர் காரைக்குடி இளங்கோ- விஜயா இணையர்களின் மகள் இளந்தமிழ் 11வது பிறந்தநாளை முன்னிட்டு கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு ரூ.3,000 நன்கொடை வழங்கியுள்ளனர்.**
- **கழக ஆதரவாளரான ராஜேந்திரன் (மும்பை) ரூ.10,000, ஓவியர் பரதன் ரூ.2,000 கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு நன்கொடை வழங்கியுள்ளனர்.**

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம் (ஆசிரியர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : september 10,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran